## மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி

**முன்னிலை:–** திரு.G.பாண்டியராஜன், B.Com.,B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும் நீதித்துறை நடுவர்,
கொடுமுடி.

2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் சனிக்கிழமை

**M.P.No.1**
**in**
**CMP No.2278/2024**
**in**
**M.C.No.1/2022**

முனியப்பன் (எ) முனியன், த/பெ.சங்கன்,
80, சீத்தப்பள்ளம், கீரனூர் கிராமம்,
கடவூர் தாலுக்கா, கரூர். - மனுதாரர்/எதிர்மனுதாரர்

//எதிர்//

1. ரம்யா முனியன்
2. மைனர் லக்க்ஷன் (வயது 7)
த/பெ.முனியப்பன் (எ) முனியன் - எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்கள்

இம்மனு 03.10.2025ம் தேதி என் முன்பு விசாரணைக்கு வந்தபொழுது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.R.சரவணன் அவர்களும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.K.C.பாலமுருகன் அவர்களும் ஆஜராகி, இரு தரப்பு வாதுரைகளை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

### உ த் த ர வு

மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு எதிராக 14.08.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒரு தலைபட்ச உத்திரவை ரத்து செய்யக்கோரி கு.வி.மு.ச.பிரிவு 126(2)ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**:–

மனுவில் மனுதாரர். CRLMP No.2278/2024 ல் மனுதாரர் தனது மனைவி. CRLMP No.2278/2024ல் மனுதாரர் ஜீவனாம்சம் வழக்கு M.C.No.1/2022 தாக்கல் செய்து தீர்ப்பு பெற்று அதன் அடிப்படையில் தொகையை வசூலிக்க வேண்டி இந்த மனுவை தாக்கல்


PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.25 17:24:19 +0530

செய்துள்ளார். மேற்படி மனுதாரர் தனக்கு எதிராக தாக்கல் செய்து தீர்ப்பு பெற்ற M.C.No.1/2022யை பெற்று மாண்புமிகு ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்து மேல்முறையீடு நிலுவையில் இருந்து வருகிறது. இந்த மனுவின் மனுதாரருக்கு எதிராக தாம்பத்திய உரிமையை மீட்டளிக்க கோரி மனு தாக்கல் செய்து தீர்ப்பு பெற்றுள்ளார். அதனை மறைத்து மனுதாரர்(ரம்யா) கொடுமுடி சார்பு நீதிமன்றத்தில் HMOP No.51/2024 விவாகரத்து மனு தாக்கல் செய்துள்ளார். தான் இந்த மனுதாரருக்கு எதிராக கரூர் குடும்பநல நீதிமன்றத்தில் GWOP No.298/2025 ஐ தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் தாமரைப்பாளையத்தில் உள்ள ஜெய்ஷன் அக்ரோ இண்டஸ்டிரிஸ் என்பதில் பணிபுரிந்து வருகிறார். மனுதாரர் மாண்புமிகு ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் M.C.No.1/2022 உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு செய்துள்ளார். ஆகவே மனுதாரர்/எதிர்மனுதாரருக்கு எதிராக 14.08.2025ம் தேதி பிறப்பிக்கப்பட்ட ஒருதலைபட்ச உத்தரவை இரத்து செய்து வழக்கை மேல் நடத்துவதற்கு உத்திரவிடக்கோரி மனு தாக்கல் செய்துள்ளார்.

2. <u>எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிர்மனு உரையின் சுருக்கம்</u>

(அ) மனுதாரர் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளை பொறுத்து எதிர்மனுதாரர்கள் சரியென ஏற்றுக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்றவற்றை மனுதாரரே நிரூபிக்க கடமைப்பட்டவர்.

(ஆ) M.C.No.1/2022 மனுவில் எதிர்மனுதாரர்களுக்கு தலா ரூ.7500/−ஐ இந்த மனுவின் மனுதாரர் ஜீவனாம்சமாக வழங்க வேண்டுமெனவும், அதன் நிலுவை தொகையை மூன்று மாதங்களுக்குள் வழங்க வேண்டுமெனவும் உத்தரவிட்டது. ஆனால் எதிர்மனுதாரர் ஜீவனாம்ச தொகையை கொடுக்காததால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுவின் மனுதாரர் ஜீவனாம்ச தொகையை கெடுக்காமல் இழுத்தடிக்க வேண்டுமென்பதற்காக மாண்புமிகு ஈரோடு மாவட்ட நீதிமன்றத்தில் வேண்டுமென்றே கால தாமதமாக மேல் முறையீடு தாக்கல் செய்தும், நீதிமன்றத்தில் GWOP No.298/2025 மனு தாக்கல் செய்தும் இந்த மனுதாரரை அலைக்கழித்து

Digitally signed by PANDIARAJAN PANDIARAJAN Date: 2025.10.25 17:24:38 +0530

வருகிறார். எதிர்மனுதாரர் நீதிமன்ற உத்தரவுப்படி ஜீவனாம்சம் கிடைக்காமல் குழந்தையை படிக்க வைக்க மற்றும் மருத்துவம், உணவுக்கு பணமில்லாமல் ஜீவனம் செய்து வருகிறார். மனுதாரர் இம்மனுவை வழக்கு விசாரணையை இழுத்தடிக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். ஆகவே மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவை தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

3. இம்மனுவில் தீர்வு காணப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

4. இரு தரப்பு ஆவணங்களை பரிசீலனை செய்து பார்க்கும்போது ஏற்கனவே மனுதாரர் 23.06.2025ல் எதிருரை வழக்கில் தாக்கல் செய்திருப்தாலும், மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்திருப்பதாலும் மனுதாரருக்கு தங்கள் தரப்பு வாதத்தை முன்வைக்க ஒரு வாய்ப்பு அளிக்கலாம் என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனுதாரர்/எதிர்மனுதாரர், எதிர்மனுதாரர்கள்/மனுதாரர்களுக்கு செலவு தொகையாக ரூ.1000/-ஐ 13.11.2025ம் தேதியன்றோ அல்லது அதற்கு முன்போ நேரடியாக செலுத்த வேண்டும் என்றும், செலுத்த தவறும்பட்சம் மனு தள்ளுபடி செய்யப்படும் என்றும், செலவு தொகையை செலுத்தப்படும்பட்சத்தில் 13.11.2025ம் தேதியன்றே தங்கள் தரப்பு வாதத்தை முன் வைக்க வேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2025ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 25ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.25 12:21:52 +05'30'

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.

**<u>மனுதாரர் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>**: – இல்லை –

**<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம், சான்றாவணங்கள்</u>**: – இல்லை –

Digitally signed by PANDIARAJAN
Date: 2025.10.25 17:05:02 +0530

PANDIARAJAN

மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.